St. Joseph's Journal of Humanities and Science (Volume 3 Issue 1 January 2016) 28-33

St. Joseph's Journal of Humanities and Science
ISSN: 2347 - 5331

http://sjctnc.edu.in/6107-2/




# கண்ணதாசன் பார்வையில் பெண்ணியச் சிந்தனைகள்

- முனைவர். ப. சுத்திகரமேரி *

## முன்னுரை

மனிதனைக் கற்றுணர்ந்த வாழ்வியல் அறிஞன் மட்டுமே கவிதையில் உண்மையான உணர்ச்சித் தழும்புகளைக் கையாள இயலும். இவ்வகையில் நோக்கினால் கவியரசு கண்ணதாசன் ஒரு வாழ்வியல் அறிஞன். தன்னுணர்ச்சி மிக்க தமிழறிஞன். தம் வாழ்வின் பெரும்பகுதியை திரைப்படத்துறையின் கவிஞராகவே செலவிட்டவர். அங்ஙனம் வாழ்ந்த காலத்தில் அவர் இயற்றிய திரை இசைப் பாடல்களின் மூலமாக வெளிப்படுத்திய பெண்ணியச் சிந்தனைகளை எடுத்துரைப்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகிறது.

## பெண்ணியம்

'Feminism' என்ற ஆங்கிலச் சொல் 'Femina' என்ற இலத்தீன் சொல்லில் இருந்து மருவி வந்ததாகும். 'Femina' என்ற சொல் தொடக்க காலத்தில் பெண்களின் பாலியல் குணாதிசயங்களைக் குறிப்பிடவே பயன்படுத்தப்பட்டது. பிறகு பெண்களின் உரிமையைப் பேசப்பயன்படுத்தப்பட்டது. தற்போது பெண்ணியத்தின் அடிப்படை நோக்கம் தம்மைச் சுற்றியுள்ள பெண்களை அறிவதும், அவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுவதும், அவர்களை முன்னேற்றுவதும், பெருமைப்படுத்துவதும், பெண்ணியத்தின் அடிப்படை நோக்கமாக விளங்குகிறது. இது ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பெண்களின் முன்னேற்றத்தை விமர்சிக்கவே ஏற்பட்டது என்று கூட கூறலாம். இனி கவியரசர் கண்ணதாசனின் திரையிசைப் பாடல்களில் இடம்பெறும் பெண்ணியச் செய்திகளை அறியலாம்.

## பெண் நலம் பாராட்டல்

பெண்மையின் நலம் பாராட்டுதல் என்பது எக்காலத்திலும் மரபாகவே விளங்கிவருகிறது. ஆன்றோர்களும், சான்றோர்களும் பெண்மையைப் பாராட்டியதோடல்லாமல் அவர்களை அழகுக்கு நிகராகவும் பார்த்தனர். சங்க காலத்தில் அன்னமும், மயிலும், புறாவும் மகளிரின் அழகு நலத்திற்கு உவமைகளாகக் கூறப்பட்டன. (கலித்தொகை.56: 15-16) கண்ணதாசனோ பெண்மையின் அழகு ஆராதிக்கப்பட வேண்டியது. மதிக்கப்பட வேண்டியது என்று தனது அனுபவங்களைக் கற்பனையோடு கலந்து பலரும் அறிந்த உண்மையை, இயற்கையை, பெண்ணோடு ஒப்பிட்டுக் கண்டு களித்து பின்வருமாறு புனைந்திருக்கிறார்.

* பேராசிரியர், தமிழ்த்துறை, தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கடலூர்-1.
கைப்பேசி: 8489241565, மின்னஞ்சல்: suthigaremary@gmail.com

"காலங்களில் அவள் வசந்தம்

கலைகளிலே அவள் ஓவியம்

மாதங்களில் அவள் மார்கழி

மலர்களில் அவள் மல்லிகை" - கண்ணதாசன், பாடல்கள், தொகுதி: 1.30

உலக இயற்கையில் எது உயர்ந்ததோ எது சிறந்ததோ அதனை பெண்ணுக்கு உவமைப்படுத்திக் காட்டி பெண்மை உயர்வானவள். அதே நேரம் மென்மையானவளும் கூட என்பதனை சுட்டிக்காட்டுகிறார். மற்றொரு பாடலில்

"பூஜைக்கு வந்த மலரே வா

பூமிக்கு வந்த நிலவே வா

பெண்ணென்று எண்ணி பேசாமல் வந்த

பொன் வண்ண மேனி சிலையே வா" - கண்ணதாசன், பாடல்கள், தொகுதி: 1.40

இவ்வாறு கூறி பெண்மை அழகு நலம் வாய்ந்ததே என்று அனைவரையும் ஒப்புக்கொள்ளவும் வைக்கிறார். பெண்மையை உயர்வு நவிற்சியாக ஓயாது உயர்த்தி உயரத்தில் வைத்த மா மனிதன் கண்ணதாசன் என்றால் அதுவே பொருத்தமானதும் கூட.

## காதலில் பெண்ணின் நிலை

காதல் பிறந்த கதைகளைக் காலந்தோறும் நமது இலக்கியங்கள் பேசியிருக்கின்றன. அதன் வழி நின்று கவிஞர் கூட தெவிட்டாத பல காதல் பாடல்களைப் படைத்துள்ளார். அதுவும் காதலில் ஒரு பெண் அகப்பட்டால் அவளது நிலை எப்படி இருக்கும் என்பதை மிக நாசுக்காக நாகரிகமான முறையில் பாடி இருப்பது சிறப்புக்குறிய ஒன்று.

"விழி பார்க்கச் சொன்னாலும்

மனம் பேசச் சொல்லாது

மனம் பேசச் சொன்னாலும்

வாய் வார்த்தை வராது

அச்சம் பாதி ஆசை பாதி

பெண் படும் பாடு" - கண்ணதாசன், பாடல்கள், தொகுதி: 2.5

என காதல் வயப்பட்ட ஒரு பெண்ணின் உள்ளத்தை அப்படியே முத்தான வார்த்தைகளால் அடுக்கிக்காட்டி காதலில் அவருக்கிருந்த ஆழ்ந்த அனுபவத்தையும் சேர்த்து வெளிப்படுத்தி இருக்கிறார்.

## கற்பு வாழ்க்கை

பெண்மையைப் போற்றிய பெருங் கவிஞர்கள் பலர் உண்டு. அவர்களுக்கெல்லாம் தோன்றாத அறியதொரு கருத்தை பெண்மைக்காகத் தேடித் தந்து பெண்மையின் கற்பினுக்கு ஒரு விளக்கம் காட்டிய பெருங் கவிஞர் கவியரசு கண்ணதாசன். இதற்கு பின்வரும் அவரது பாடல்வரிகளே சான்றாகும்.

"கண்ணன் முகம் கண்ட கண்கள்

மன்னர் முகம் காண்பதில்லை

கண்ணனுக்குத் தந்த உள்ளம்

இன்னொருவர் கொள்வதில்லை" - கண்ணதாசன், பாடல்கள், தொகுதி: 2.21

கவிஞர் ஆணாக இருந்து கொண்டு ஒரு பெண்ணின் மனதினை உளவியல் பாங்கோடு புலப்படுத்திக் காட்டியிருப்பது அவரது உலகியல் அனுபவத்தையும் மரபு சார்ந்த பண்பையும் நமக்கு நன்றாகவே தெரிவிக்கின்றது. ஒரு பெண் தனக்குரியவனைக் கண்ட கண்களால் அவன் மன்னனாக இருந்தாலும் மற்றவனைக் காண மறுப்பாளாம். தன்னுடையவனுக்குத் தந்த உள்ளத்தை மற்றொருவனுக்குத் தர மறுக்கின்ற உள்ளத்தையும் உடையவளாக இருப்பாளாம். ஆக பெண்மையின் பரிசுத்தம் கண்ணிலும் உள்ளத்திலும் தான் இருக்கிறதென்பதனை உலகுக்கே உணர்த்தியவர் இவராகத் தான் இருக்க முடியும். சமுதாயத்தில் ஒட்டு மொத்தப் பெண்களின் கற்பு வாழ்க்கை இது தான் என வெளிப்படுத்தி இருப்பது அவரது அனுபவ முதிர்வை வெளிப்படுத்திக்காட்டியிருக்கிறது என்றே தெளியலாம்.

## இல்லறத்தில் பெண்

குடும்பம் உருவாக காரணமே பெண் என்கிறார். ஒருத்தி ஒருவனை மணந்துக்கொண்டால் அந்த உரிமைக்குப் பெயர் குடும்பம் என்கிறார். குடும்ப வாழ்க்கையில் கணவன் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கும் பெண்னை கவிஞர் நம் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறார்.

"மண் பார்த்து விளைவதில்லை

மரம் பார்த்துப் படர்வதில்லை

கன்னியரும் பூங்கொடியும் கண்ணய்யா-அவர்

கண்ணிலே களங்கம் உண்டோ சொல்லையா" - கண்ணதாசன், பாடல்கள், தொகுதி: 1.32

என்று பாடி இல்லறத்தில் அகப்பட்டுள்ள ஒவ்வொரு ஆணுக்கும் அசத்தலான ஒரு நம்பிக்கையை ஊட்டுகிறார் கவிஞர். மேலும் இல்லற வாழ்க்கையில் கணவனுக்குச் சேவை செய்வதில் தான் பெண்ணுக்கு ஆனந்தமே உண்டு என்பதனைக் கூறும் வகையில்

"காலம் பகைத்தாலும் கணவர் பணி செய்து

காதல் உறவாடுவேன்-உயர்

மானம் பெரிதென்று வாழும் குலமாதர்

வாழ்வின் சுவை கூறுவேன்" - கண்ணதாசன், பாடல்கள், தொகுதி: 2.13

பெண்மையின் உன்னத வாழ்வினை அதன் நிலையை அப்படியே உணர்த்தியுள்ளார். நல்ல மனைவியின் இலக்கணம் கணவனை எல்லா சூழ்நிலையிலும் கவனித்து மகிழ்வு கொள்வதாகும். மனைவிக்குரிய அன்பு, பொறுமை, அமைதி, குலமகள் என்ற சிறப்பினைத் தன்னுடைய பாடல்வரிகளில் கண்ணதாசன் படைத்துக்காட்டி இருக்கிறார்.

"பொறுமையுடன் பாசமுண்டு பெண்ணிலே-அதன்

பூசையெல்லாம் எதிரொலிக்கும் விண்ணிலே-என்

வீடு என்பதும் கோயிலென்பதும் ஒன்று தான் நான்

வாழ்வு என்பது காணவந்தது இங்கு தான்" - கண்ணதாசன், பாடல்கள், தொகுதி: 3.10

எனக் கணவனைக் கோயில் தெய்வமாய்த் தலைவி பார்க்கிறாள் என்று பெண்மையின் இல்லற வாழ்க்கையை பெருமைபடுத்திக்காட்டுகிறார். குடும்பத்தில் ஆணிவேர் ஆணாக இருந்தாலும் அதை அரவணைத்துக் கொண்டு செல்லும் சக்தி பெண்ணிடமே இருக்கிறது என்பது அவரது பாடலில் நிறையவே வெளிப்படும்.

## தாய்மை

பெண்மைக்கு அதிகமானச் சுமைகள் பல இருந்தாலும் தன் குடும்பம், தன் கணவன், தன் குழந்தை என்ற நேசத்தை மட்டும் தன் நெஞ்சத்திலே சுமந்து கொண்டிருப்பவளாகத் தான் வாழ்கிறாள். இதனால் தன்னுடைய சுய உரிமையாகிய தூக்கத்தையும் கூட மறக்க வேண்டிய சுழ்நிலை அவளுக்கு ஏற்படுகிறது. இதனை ஒரு பெண் உணர்ந்து தன் பெண் பிள்ளைக்குத் தாலாட்டில் கூறுவதாக கவிஞர் பின்வரும் வரிகளில் எழுதுகிறார்.

"பெண்ணாகப் பிறந்தவர்க்கு கண்ணுறக்கம் இரண்டு முறை

பிறப்பில் ஒரு தூக்கம் முடிவில் ஒரு தூக்கம்

இப்போது விட்டு விட்டால் எப்போதும் தூக்கமில்லை

எண்ணரிய கண்மணியே கண்ணுறங்கு கண்ணுறங்கு" - கண்ணதாசன், பாடல்கள், தொகுதி: 4.21

இவ்வாறு பெண்மையின் உண்மையான நிலைதனை எடுத்து உணர்த்தும் விதமாக பாடியிருப்பது ஆண் சமுதாயம் சிந்திக்க வேண்டிய ஒன்று. உலகத்தில் எத்தனை உறவுகள் இருந்தாலும் தாய்மையில் கிடைக்கும் இன்பமோ பெருமையோ ஒரு சொல்லில் சொல்லி விட முடியாது. அது ஒரு மாபெரும் மந்திர சக்தி. அந்த சக்தி தான் அம்மா. இதனை

"கன்றின் குரலும் கன்னித் தமிழும்

சொல்லும் வார்த்தை அம்மா அம்மா

கருணை தேடி அலையும் உயிர்கள்

உருகும் வார்த்தை அம்மா அம்மா

எந்த மனதில் பாசம் உண்டோ

அந்த மனமே அம்மா அம்மா" - கண்ணதாசன், பாடல்கள், தொகுதி: 3.9

தாய்மையில் கிடைக்காத இன்பம் வேறு எதிலும் கிடைப்பதில்லை. தாய்மைக்கு செவி சாய்க்காத உயிர்களே இல்லை என்றே கூறலாம். இந்த உலகத்தைக் கண்டுகளிக்கத் தன்னைப் படைத்தது தாய் இட்ட பிச்சை என்று பெண்மையில் இருக்கின்ற தாய்மையை எடுத்துச் சொல்லி பெண்ணாகிய தெய்வத்தை வணங்கச் சொல்கிறார்.

## திருமண வாழ்க்கையில் வேறுபாடு

இல்லற வாழ்க்கையில் நிலையாமை என்ற ஒன்று இடம்பெறும் போது அதில் மிகுதியாகப் பாதிக்கக்கூடியவள் பெண்ணாகத்தான் இருப்பாள். அவ்வாறு பாதிக்கப்படுகின்ற அந்தப் பெண் எவ்வாறெல்லாம் புலம்புவாள் எப்படி எல்லாம் தன் எண்ணத்தைக் கொட்டிக் குவிப்பாள் என்பதை கண்ணதாசன் மிக அழகாகவே விளக்குகிறார்.

"எட்டடுக்கு மாளிகையில்

ஏற்றி வைத்த என் தலைவன்

விட்டு விட்டுச் சென்றானடி - இன்று

வேறுபட்டு நின்றானடி" - கண்ணதாசன், பாடல்கள், தொகுதி: 2.26

பெண்ணின் வாழ்க்கையில் பிரிவு ஏற்படுத்தும் துயரினை அப்படியே யதார்த்தமாகத் தெரிவித்திருக்கிறார்.

## பெண்ணுரிமை மறுப்பும் அடிமைத் தனமும்

மண் விடுதலை அடைந்த போதும் இன்னும் பெண் விடுதலை அடைந்த பாடில்லை. இன்றைய சமுதாயத்தில் பெரும்பாலான பெண்களின் நிலை இப்படித்தான் இருக்கிறது என்பதனை பின் வரும் பாடல்களில் வடித்துத் தந்திருக்கிறார்.

"பெண்ணே தெய்வம் அன்னை கடவுள்

பெருமை என்று பேசுகிறான் - பெண்

பேதைகள் என்றும் பீடைகள் என்றும்

மறுநாள் அவனே ஏசுகிறான்" - கண்ணதாசன், பாடல்கள், தொகுதி: 1.22

எனப் பெண்களின் வாழ்க்கையில் நடக்கும் யதார்த்த நிலையினை அப்படியே சுட்டிக் காட்டிய கவிஞர் அடுத்து வரும் பாடலில்

"பெண் பெருமைப் பேசிப் பேசிக்

காலம் கழிப்பார்

தன் பெருமை குலையுமென்றால்

பெண்ணை அழிப்பார்" - கண்ணதாசன், பாடல்கள், தொகுதி: 2.15

தேவையான போது பெருமைப்படுத்தி பேசுகின்ற அதே ஆண் சமுதாயம், தேவையற்ற நிலையில் அவளை இழிவு படுத்துவதற்கும் ஏன் அழிப்பதற்கும் கூட தயங்குவதில்லை என்கிறார். மேலும் சுட்டுகிறார்

"இல்லறம் ஒன்றே நல்லறம் என்றியவர்

வாழவும் விடமாட்டார் பெண்ணை

வாழவும் விடமாட்டார் இந்தத்

தொல்லையில்லாமல் மறைவதென்றாலும்

சாகவும் விடமாட்டார்" - கண்ணதாசன், பாடல்கள், தொகுதி: 2.18

பெண்களின் நிலை இப்படித்தான் காலம் காலமாக இருக்கின்ற தென்பதை வெளிப்படையாகவே கூறுகிறார். வேட்டையாடும் மானாக, வித்தைக் காட்டும் பொருளாகத்தான் இன்று பெண்களின் நிலை நாட்டில் அவலத்திற்குள்ளானதாக உள்ளது என்பதனை தெரிவிக்கிறார். இதனை யெல்லாம் கண்டு கொதித்தெழுந்த கவிஞர்

"சித்திரத்தில் பெண்ணெழுதி

சீர் படுத்தும் ஆண் இனமே

ஜீவனுள்ள பெண்ணினத்தை

வாழவிட மாட்டாயா?" - கண்ணதாசன், பாடல்கள், தொகுதி: 1.27

என்று பெண்களுக்காக சமுதாயத்திடம் கவிஞரே புலம்புவதை பார்க்க முடிகிறது. இவ்வாறு புலம்புகின்ற கவிஞர் பெண்ணடிமைத் தனத்தை அடியோடு கிள்ளியெறிய எண்ணி ஒரு முடிவோடு பெண்ணினத்தை நோக்கி

"இது புரட்சி காணும் உலகம்-தினம்

புதுமை காணும் உலகம் நீ

பொறுக்க வேண்டும் தாயே - ஒரு

புதிய காலம் மலரும்" - கண்ணதாசன், பாடல்கள், தொகுதி: 3.11

என்று தமிழ்ச் சமுதாயத்தின் ஒட்டு மொத்த பெண்களின் சார்பில் குரல் எழுப்புகிறார். பின்வருமாறு கூக்குரலும் இடுகிறார்.

"பெண்ணில்லாமல் பிறப்பில்லை

பெண்ணில்லாமல் உறவில்லை" - கண்ணதாசன், பாடல்கள், தொகுதி: 2.3

எனப் பெண்மையின் சிறப்பை எடுத்தியம்புவதோடல்லாமல் ஆண் சமுதாயத்திற்கு இறுதியாக ஓர் எச்சரிக்கையும் விடுக்கிறார்.

## கைம்மை

கொடிய விலங்குகள் கூட தன்னினத்தை அடிமைப் படுத்தி வாழ்வதுமில்லை. தன்னினத்தில் ஏற்றத்தாழ்வை புகுத்திப் பார்ப்பதுமில்லை. ஆனால் மனித சமுதாயம் மட்டும் தான் தன்னினமான பெண்ணினத்தை அடிமைப்படுத்தி நம்பிக்கை, சகுனம் என்ற பெயரில் மூடப்பழக்கவழக்கங்களுக்கு ஆட்பட்டு பெண்ணினத்தின் உணர்வுகளை முடமாக்கிய நிலையினைக் கவிஞர்

"பூங்கொடியில் விதவை இல்லை-மான்

குலத்தில் விதவை இல்லை-பகுத்

தறிவு கொண்ட மாந்தர்-தம்

அறிவில் விதவையானார்" - கண்ணதாசன், பாடல்கள், தொகுதி: 4.14

என்கிறார். பிற உயிர்களில் விதவை என்ற ஓரினம் இல்லை. ஆறாம் அறிவினைப் பெற்ற மனிதர்களிடம் மட்டும் தான் உள்ளது. மேலும் புறத்தோற்றத்திற்குத் தான் விதவை. சிந்திக்கும் ஆற்றலுடைய மனதிற்கு இல்லை என்பதை தான் இப்படிக் கூறியிருக்கிறார். பெண் சகுணம், சடங்கு என்ற பெயர்களில் முடக்கப்படும் போது நாட்டின் முன்னேற்றமும் வினாவாகி விடுவதை சமூகம் உணர்ந்து செயல்பட்டால் தான் ஓர் ஒப்புயர்வற்ற தமிழகத்தை நாம் காண முடியும் என்கிறார்.

## முடிவுரை

சங்க காலம் முதல் இக்காலம் வரை பெண்ணைப்பற்றிப் பலவிதமான கருத்துக்கள் பேசப்பட்டாலும் எழுதப்பட்டாலும் தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த வரை பெண்ணை நிந்திக்காமல் அவளைப் பூவாகவும் சுய மரியாதையாகவும், சிறந்த ஆன்மாவாகவும் தமது கவிதைகளில் வடித்திருப்பது கண்ணதாசன் மட்டுமே. புதிய பெண் சமுதாயத்தைப் படைக்க அவர் எடுத்தாண்ட அனைத்துக் கருத்துக்களும் ஆழம் மிக்கவை அர்த்தமுள்ளவை. பெண்ணைப் போகப் பொருளாகவே மதித்து வந்த சமூக சீர் கேட்டை தகர்த்தெறிந்து பெண்மையின் சிறப்புகளை வெளிப்படுத்திக் காட்டியவர். இவரது உணர்ச்சி மிகுந்த கருத்துக்களும் உணர்வுகளும் காலம் பல கடந்தாலும் நிலைத்திருக்கும் ஆற்றல் வாய்ந்தவை.